## நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

## சி.சி. 24/2017

2023 ம் ஆண்டு ஜனவரி மாதம் 04 ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 1 வது நபாின் வாக்குமுலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிாிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சேகர் | வயது | 55 |
| த.பெ.(அ)க.பெ. | வேடி | தொழில் | விவசாயம் |
| ஊர் | தாதகுள்ளனுார் | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்துார் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்துார் | | |

முதல் விசாரணை :

நான் தாதகுள்ளனுார் கிராமத்தில் வசிக்கிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். 1 ம் எதிரி எனது தங்கை. 2 ம் எதிரி ராஜா அவருடைய கணவர். கடந்த 09.09.2016 அன்று காலை 9.00 மணியளவில் என் அப்பாவிற்கு சொந்தமான இடத்தில் ஏர் ஓட்டிக்கொண்டிருந்தேன். அப்போது எதிரி எனது தங்கை விஜயா வந்து எனக்கும் என் அப்பாவிற்கும் நிலப்பிரச்சனை உள்ளது என்றுசொல்லி ஏர் ஓட்டக்கூடாது என கூறி நான் ஓட்டி வந்த ஏர்க்கு முன்பு வந்து நின்று மடக்கினார்.அப்போது மாடு மற்றும் நுகத்தடி தட்டி விஜயா கீழே விழுந்துவிட்டார். பின்னர் அங்கிருந்து சென்றுவிட்டார்.பின்னர் மறுநாள் என் மீதும், என் அப்பா வேடி, என் மனைவி சீனா மீதும் கேஸ் கொடுத்துவிட்டார். அதனால் மறுநாள் திருப்பத்துார் கிராமிய காவல் நிலைய போலீஸார் என்னை பிடித்து சென்று ஜெயிலில் அடைத்துவிட்டார்கள். நான் ஒருவாரம் ஜெயிலில் இருந்தேன். நான் ஜெயிலுக்கு போவதற்கு முன்பு எனக்கு சொந்தமான 35 வெள்ளாடுகள் அதில் 3 பெரியஆடுகள், 1 கெடா மற்றும் 21 சின்னகுட்டிஆடுகள் ஆகியவற்றை என் அப்பாவிடமும், சுந்தரம் என்பவரிடமும், பாதுகாப்பாக பார்த்துக்கொள்ளும்படி விட்டுச்சென்றேன். நான் ஒருவாரம் சென்று ஜெயிலில் இருந்து வெளியே வந்த போது மேற்படி எனது ஆடுகள் அனைத்தையும் எதிரிகள் ஓட்டிச் சென்றுவிட்டதாக என் அப்பாவும் சுந்தரமும் சொன்னார்கள். அவர்கள் எவ்வளவு மடக்கியும் அதை மீறி எதிரிகள் ஓட்டிச்சென்றதாக கூறினார்கள். நான் 20.09.2016 அன்று மேற்படி எதிரிகள் எனது ஆட்டை ஓட்டிச்சென்றது குறித்து திருப்பத்துார் கிராமிய காவல் நிலையத்தில் புகார் அளித்தேன்.அவர்கள் எதிரிகளை விசாரித்தனார். ஆனால் அவர்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. பின்னர் மேற்படி நடவடிக்கை

எடுக்கவில்லை என்பதால் மேல்அதிகாரிகளுக்கும் புகார் அளித்தேன். அந்த புகாரின் மீது போலீஸார் அழைத்து விசாரித்தார்கள். ஆனால் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர்கள் எங்களை சமாதானமாக போகச்சொன்னார்கள். என் ஆடுகள் அனைத்தையும் எதிரிகள் ஓட்டிச்சென்றுவிட்டதால் நான் அவர்களுடன் பைசலாகி போக விரும்பவில்லை. மேற்படி எதிரிகள் ஆட்டை ஓட்டிசசென்றதற்கு என் அப்பா வேடியும், சுந்தரம் என்பவரும் சாட்சியாவார்கள். மேற்படி ஆடுகளின் மதிப்பீடு ருபாய் 1,50,000/- ஆகும். மேற்படி என் ஆட்டை ஓட்டிச்சென்ற எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.